


- வாழ்வோம்

புதையல் 5

தமிழ்-தமிழர், தமிழ்நாட்டிற்காகவும் குரல்கொடுத்த திராவிட இயக்க இதழ்களில் வெளியான, பல்வேறு காலங்களையும் தாண்டி நிலைத்து நிற்கும் சிறப்புமிக்க எழுத்துகளில் இருந்து சில பகுதிகள்...



இலங்கையில் தமிழ்!

‘இலங்கையில் ஆட்சி மொழியாக - தேசிய மொழியாக சிங்களத்தைப் போலவே தமிழ் மொழியும் இருக்க வேண்டும்’ என்ற இலங்கைவாழ் தமிழர்களின் நியாயமான கோரிக்கையை ஒட்டிப் புகைச்சலும் பூசலும் கடந்த சில நாட்களாக, அந்தச் சின்னஞ்சிறு தீவில் நிலவி வருகின்றன.

தமிழ் மொழிக்கும் சிங்கள மொழியைப் போலவே, அரசியல் சட்டரீதியான சம ‘அந்தஸ்து’ வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்துவதற்காகக் கடந்த கிழமையில், கொழும்பு நகரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில், ‘புத்த சன்னியாசிகள்’ எனப்படுவோர் செய்த ‘கிளர்ச்சி’யை ஒட்டி, நகரில் உள்ள தமிழர்கள் பலர் தாக்கப்பட்டு, தமிழர் கடைகள் பல கொள்ளையிடப்பட்ட - வருந்தத் தக்க குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. மீண்டும், அதே கொள்கையை வலியுறுத்துவதற்காக, வேறொரு கட்சியினர் கொழும்பு நகரில் கூட்டம் கூட்டியபோதும், முன்பு போலவே ‘கலகம்’ விளைவித்திருக்கின்றனர், சிலர்.

இலங்கையில் வதியும் சுமார் 10 இலட்சம் தமிழர்களில் கணிசமான பேர்களை அங்கிருந்து துரத்திவிடுவதில், தீவிரமாக ஈடுபட்டிருக்கும் கொத்தலாவலை சர்க்கார், தமிழ் மொழிக்கும் சிங்களத்தைப் போல அரசியல் சட்ட ரீதியாக ஆட்சி மொழியாக இடம் தருவதில் நியாயத்துடன் நடந்துகொள்ளும் என்று திடமாகச் சொல்வதற்கு முடிய வில்லை. ஏனெனில், அவர் நேற்று முன்தினம் நடைபெற்ற தனது கட்சியைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர்களிடத்தில் பேசுகையில், ‘தமிழ் மொழி தொடர்ந்து அலுவல் மொழியாக நீடிக்கச் செய்ய வேண்டுமென்பதே சர்க்காரின் கொள்கை. ஆனால், தமிழ் மொழிக்குச் சட்ட ரீதியான இடம் தருவதற்காக, அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கூறப்படுவதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது’ என்று தெரிவித்திருப்பதாக, இலங்கை நிருபர் ஒருவர் தெரிவிக்கிறார்.

‘அலுவல் மொழியாகத் தமிழ் தொடர்ந்து நீடிக்கும்; ஆட்சியினர் தமிழ் மொழியிலேயே வருங்காலத்திலும் அலுவல்களை நடத்த ஒப்புவர்’ என்பது உண்மையானால், ‘அந்த நடைமுறையைச் சட்டத்தின்மூலம் உறுதிசெய்வதில் தவறென்ன?’ - என்பதை பிரதமர் கொத்தலாவலை விளக்க வேண்டும்.

‘தமிழ் மொழி, எதிர்காலத்திலும் அலுவல் மொழியாக இயங்கும் - இயங்கச் செய்வோம் - என்ற கொத்தலாவலை இருதயசுத்தியோடு கூறுவதனால், தமிழ் மொழியும் சிங்களத்தைப் போன்ற அந்தஸ்து உடையது என்று சட்டம் செய்வதற்குத் தயங்குவானேன்?’ -என்று இலங்கைத் தமிழரில் ஒரு பகுதியினர் கேட்கின்றனர்.

ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றுவதற்காக எதிர்க்கட்சினர் கையாளும் தந்திரம்தான், ‘தமிழ் மொழிக்குச் சற்று ரீதியான இடம் தேவை என்று கோருவது’ என்பதாகக் கொத்தலாவலை கூறும் காரணம், ஆட்சிப்பீடத்தில் அமரும் எல்லோருமே, பொதுவில் எதிர்க்கட்சினர்மீது சுமத்தும் குற்றச்சாட்டுகளைப் போல ஒன்றுதான் - என்றே இலங்கைத் தமிழர் கருதுவர்.

சிங்களவரைத் தவிர, இலங்கையில் தமிழர்களே இல்லாது செய்துவிட வேண்டும் - என்ற வெறிகொண்ட சிங்களவர் சிலரின் கூக்குரலுக்கும் வீண் ஆர்ப்பாட்டங்களுக்கும் அஞ்சியே தான், கொத்தலாவலை சர்க்கார், தமிழ் மொழிக்கு அரசியல் சட்டரீதியான பாதுகாப்பு தர மறுக்கிறது - வேறு நியாயமான காரணங்களுக்காக அல்ல - என்று, இலங்கைத் தமிழர் இயக்கத் தலைவர்கள் சிலர் கருதுவது, தவறுடையது எனக் கொள்வதற்கில்லை.

சிங்களப் பெருமக்களும் கொத்தலாவலை சர்க்கார் துரத்தியது போக - துரத்தத் திட்டமிட்டுள்ளது போக, எஞ்சும் தமிழர்களின் எதிர்காலம் பற்றி எண்ணிப் பார்த்தாக வேண்டும்.

இலங்கை தி.மு.கழகத்தவர், `சிங்களம் - தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் இலங்கையின் அரசாங்க மொழிகளாக ஆக்கப்பட வேண்டும்’ என்று கோரி, அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.


தமிழ் மொழியும் தங்களது சிங்கள மொழியைப் போல சமநிலை பெறுவதால், தங்கள் வாழ்வுக்கும் - செல்வாக்கிற்கும் எந்தவித குந்தகமும் ஏற்பட்டு விடப்போவதில்லை என்பதையும் சிங்களப் பெருமக்கள் உணரவேண்டியது அவசியம்.

இலங்கை தி.மு.கழகத்தவர், ‘சிங்களம் - தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் இலங்கையின் அரசாங்க மொழிகளாக ஆக்கப்பட வேண்டும்’ என்று கோரி, அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். இந்தக் கோரிக்கைக்காக, மக்கள் சபையில் டாக்டர் பெரிரா கொண்டுவந்துள்ள தீர்மானத்தின்மீது விவாதம் நடைபெறும். அந்த முடிவு யூகிக்கக்கூடியதுதான் என்றாலும், பொறுத்திருந்து பார்ப்போம். அந்த முடிவுக்குப் பின் ஏற்படும் விளைவுகளுக்கு, கொத்தலாவலை சர்க்காரின் வழக்கமான, அநீதி நிறைந்த போக்கே பொறுப்பாக இருக்க முடியும்.

(‘நம்நாடு’ தலையங்கம், 20.10.1955)

● பாரத் ஸ்ரீமன் அழகேசன் ●

கலகக்காரர் கலைஞர் 05



அன்று டெல்லியில் நடந்த செய்தியாளர் சந்திப்பில், ஒன்றிய - மாநில அரசுகளின் உறவு, மாநில சுயாட்சி உள்ளிட்ட கேள்விகளுக்கு அளித்த பதில், வரலாற்றில் இடம்பெற்றது.

■ எழுத்து: **மகிழவன்,**
ஏஐ உருவாக்கம்: **ஆரிஃப் முகம்மது**

ஃப்ளாஷ்பேக்



முத்தமிழறிஞர் அளித்த பரிசு!



கவிஞர்.இரா. இரகசியன் (எ) திருமலை

2000-ஆம் ஆண்டில், ‘வாணியம்பாடி முத்தமிழ் மன்றம்’ சார்பில், அன்றைய வேலூர் மாவட்ட அளவில் நடைபெற்ற கவிதைப் போட்டியில், வெற்றியாளர் பட்டியலில் இடம்பெற்றேன். அதற்கான பரிசளிப்பும் பாராட்டு விழாவும் வாணியம்பாடியில், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. அந்த இலக்கிய விழாவில், கலைஞர் முன் என் பெயர் வாசிக்கப்பட்டு, அவர் கரங்களால் பாராட்டுச் சான்றிதழ் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. விழா மேடையில், இன்றைய கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்களும், மறைந்த கவிஞர் வாலி, கவிக்கோ அப்துல்ரகுமான் மற்றும் கவியருவி அப்துல்காதர் ஆகியோரும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

- **கவிஞர்.இரா.இரகசியன் (எ) திருமலை, சேத்துவண்டை, கே.வி.குப்பம் ஒன்றியம், வேலூர் வடக்கு மாவட்டம்.**

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

1962

கோ.சு.மணி மரணம்!

ஜூலை மாதம், விலைவாசி உயர்வைக் கண்டித்து, கழகம் நடத்திய அறப்போரில் கைதுசெய்யப்பட்டு, மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றிருந்தார், கழக முன்னோடி கோ.சுமணி. சென்னை மாநகராட்சி மன்ற 27-வது வட்ட உறுப்பினராக இருந்தவர், சென்னை மாவட்டக் கழக நான்காவது மாநாட்டுத் தொண்டர் படைத் தலைவராக அரும்பணியாற்றியவர். செப்டம்பர் மாதம் 10-ஆம் நாள் நள்ளிரவு, உடல்நலம் பாதிக்கப்பட்டு, மருத்துவமனை கொண்டுசெல்லப்பட்ட நிலையில், 12 -ஆம் தேதி மரணம் அடைந்தார்.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900